DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 259/2010 |
| Deposition of Witness for | Prosecution PW 11 |
| Name | சுந்தரி |
| Father / Husband Name | சண்முகம் |
| Village | |
| Taluk | காரைக்குடி – பள்ளத்துூர் |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 14th May 2024.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:–**

1) நான் தற்சமயம் பள்ளத்தூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2010 ம் தேதி காளையார் கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 04.07.2010 ம் தேதி 17.00 மணிக்கு அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று காளையார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 139/2010 இதச பிரிவு 304–A கீழ் வழக்குப் பதிவு செய்தேன். **(இந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** முதல் தகவல் அறிக்கையினை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் குற்றவியல்

நீதிமன்றம் எண். 1, சிவகங்கை அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–

1) அ.சா.1 கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடமானது S வடிவ அபாயகரமான வளைவுப் பகுதி என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் அந்த வளைவான பகுதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 700 மீ. தூரம் இருக்கும் . விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் ஏற்பட்டது அல்ல என்றாலும் இறந்த நபரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 14.05.2024**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**